செ.வெ.எண்: 75/2018 நாள்: 24.01.2018

**ஒகி புயலால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணத்தொகை வழங்குவது தொடர்பான ஆய்வு கூட்டம் வேளாண் உற்பத்தி ஆணையர் மற்றும் வேளாண்மைத்துறை அரசு முதன்மைச் செயலர் திரு.ககன்தீப்சிங்பேடி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் ஒகி புயலால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணத்தொகை வழங்குவது தொடர்பான ஆய்வு கூட்டம் வேளாண் உற்பத்தி ஆணையர் மற்றும் வேளாண்மைத்துறை அரசு முதன்மைச் செயலர் திரு.ககன்தீப்சிங்பேடி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (24.01.2018) நடைபெற்றது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒகி புயல் நிவாரணத்தொகையை விவசாயிகளின் வங்கி கணக்குகளுக்கு செலுத்துதல், தோட்டக்கலைத்துறையால் செயல்படுத்தப்படும் புயலால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கான சிறப்பு வாழ்வாதாரத் திட்டம், பிரதம மந்திரி பயிர் காப்பீடு திட்டம், நுண்ணீர் பாசனத் திட்டம், கூட்டுப்பண்ணையத் திட்டம் ஆகியவற்றின் முன்னேற்றம் குறித்து ஆய்வு நடைபெற்றது.

மேலும் வடசேரி ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் மற்றும் கன்னியாகுமரி விற்பனைக்குழு செயல்பாடுகளையும் வேளாண்மை உற்பத்தி ஆணையர் அவர்கள் ஆய்வு செய்தார்கள்.

ஆய்வுக்கூட்டத்தில் கூடுதல் ஆட்சியர்(வளர்ச்சி) திரு.ராகுல்நாத்,இ.ஆ.ப, மாவட்ட வருவாய் அலுவலர் திரு.இளங்கோ, பத்மநாபபுரம் சார் ஆட்சியர் திரு.ராஜகோபால்சுங்கரா,இ.ஆ.ப., வேளாண்மை இணை இயக்குநர் திரு.பாண்டியன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் திரு.எம்.நிஜாமுதீன், தோட்டக்கலை துணை இயக்குநர் திரு.அசோக்மேக்ரின், வேளாண்மைப் பொறியியல் துறை செயற்பொறியாளர் திரு.செல்வரத்தினம், வேளாண்மை, தோட்டக்கலை உதவி இயக்குநர்கள் மற்றும் வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண்மை விற்பனைத்துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்